**செய்தி வெளியீடு எண்: 593** **நாள்:15.08.2020**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சுதந்திர தின திருநாளில் ஆற்றிய உரை – 15.8.2020

**மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்**

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்களே!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்
திரு. கே. சண்முகம் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!

காவல்துறை தலைமை இயக்குநர்
திரு.ஜே.கே.திரிபாதி அவர்களே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

தரைப்படை, விமானப்படை, கடற்படை, கடலோரப் பாதுகாப்பு மற்றும் மத்திய பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளே!

தாய்நாட்டிற்காகத் தங்கள் உயிரை துச்சமென எண்ணி போராடிய
போற்றுதலுக்கு உரிய சுதந்திரப் போராட்ட தியாகிகளே!
வாரியத் தலைவர்களே! தன்னலம் கருதாமல் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைப் பணி ஆற்றும் மருத்துவர்களே! செவிலியர்களே! மருத்துவப் பணியாளர்களே! தூய்மைப் பணியாளர்களே! காவல், உள்ளாட்சி, வருவாய், தீயணைப்பு, கூட்டுறவு, உணவு வழங்கல் மற்றும் பிற துறை அரசு ஊழியர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

இளைஞர்களே! மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தையும், இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த கொடிய வைரஸ் கொரோனா தொற்று பாதிப்பின் காரணமாக, மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், இச்சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கும் முக்கிய பிரமுகர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் நம் தாய்த்திரு நாட்டின் மணிக்கொடியை நான்காவது முறையாக ஏற்றி வைத்ததில் நான் பெருமிதம் அடைகிறேன்.

வங்கக் கடலோரம் வீசும் பூங்காற்றில், சுதந்திரமாக பட்டொளி வீசிப் பறக்கும் நம் மணிக் கொடி, இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த பல தியாகச் செம்மல்களின் வரலாற்று பதிவுகளை நம் கண் முன்னே கொண்டு வந்து சேர்கிறது.

ஒவ்வொரு இந்தியனின் உணர்விலும் ‘அகிம்சை’ எனும் அறம் உள்ளூர கலந்திருப்பதை உணர்ந்த நமது தேசத்தந்தை காந்தியடிகள், அடிமை விலங்கை தகர்த்தெரிய அகிம்சை வழியில் தேசத்தை ஒருங்கிணைத்து, அறப்போராட்டங்களை நடத்தி, நம் தாய்த்திருநாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்.

அவ்வழியிலேயே, நம் மாநிலத்தைச் சேர்ந்த பல தியாக சீலர்கள், அடிமை விலங்கை தகர்த்தெரிய, தங்களின் சொந்த நலன்களை பற்றி கொஞ்சமும்

சிந்திக்காது, நாட்டு விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தனர். அவர்களின் தியாகங்களை நினைவு கூரும் திருநாள் இது.

வீரன் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன்,

வீரமங்கை வேலுநாச்சியார், மருது சகோதரர்கள்,

மாவீரன் தீரன் சின்னமலை, பகதூர் வெள்ளையத்தேவன்,

வீரன் அழகு முத்துக்கோன், தளபதி ஒண்டி வீரன்,

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார்,

கொடிகாத்த திருப்பூர் குமரன், வீரத்தாய் குயிலி,

விருப்பாட்சி கோபால நாயக்கர்,

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்,

தியாகி சீனிவாச ராவ், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்,

தியாகி விசுவநாததாஸ்,

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்,

கந்தவராயன், சந்தவராயன், மயூரம் நாகப்ப படையாச்சி,

சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், ரிபல் முத்துராமலிங்க சேதுபதி,

வ.வே.சு ஐயர், ஜெய்ஹிந்த் செண்பகராமன்,

வீரர் சுந்தரலிங்கம், வீரமுரசு சுப்பிரமணிய சிவா,

மகாகவி பாரதியார், தந்தை பெரியார்,

மூதறிஞர் ராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி,

பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவச்சலம்,

தியாகசீலர் கக்கன், பொதுவுடைமை வீரர் ஜீவா,

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை,

வீர வாஞ்சிநாதன், தில்லையாடி வள்ளியம்மை

போன்ற எண்ணற்ற தலைவர்களும், கவிஞர்களும், கலைஞர்களும், இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா தியாகங்களை செய்ததுடன், சுதந்திர உணர்வையும் பரப்பி, இன்னமும் நமது நாட்டின் அடையாளங்களாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே – நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே”**

என்ற மகாகவி பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, சமீபத்தில் நமது எல்லைப் பகுதியில் அண்டை நாடு ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டபோது, “நாம் இந்தியர்” என்ற உணர்வோடு நம் படைகளுக்குப்பின் வலுவாக துணை நின்று நிரூபித்தோம். மேலும், நம் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் அனைவரும் உறுதுணையாக இருப்போம் என்று உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன்.

**“சுதந்திரத்தை பெற்று விடுவது கூட எளிது. அதை பாதுகாப்பது அதைவிடக் கடினம். பாதுகாப்பது கூட எளிது. சுதந்திரத்தால் ஏற்படும் பயன் எல்லோருக்கும் சேரச் செய்வது கடினம்”** என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா, அவர்களின் வழி வந்த எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, **அமைதி, வளம், வளர்ச்சி** என்ற முப்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில் சுதந்திரத்தின் பயனை அனைவரும் பெறும் வகையிலான பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழ்நாடு

எல்லாத் துறைகளிலும் அளப்பறிய முன்னேற்றம் கண்டு, ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

இந்த ஆண்டு உலகைத்தையே கொரோனா வைரஸ் தொற்று புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்நோய் தொற்றிலிருந்து தமிழ்நாட்டு மக்களை மீட்பதற்கு சரியான வழிமுறைகளை கடைபிடித்து, உங்களின் மக்கள் நல அரசு நேர்மையுடனும், உண்மையுடனும் செயல்பட்டு, பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. குறிப்பாக, நாட்டிலேயே நாளொன்றுக்கு பரிசோதனை செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையும், இதுவரை பரிசோதனை செய்யப்பட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில்தான் அதிகம். இதனால், விலை மதிக்க முடியாத மனித உயிர்களை நாம் காப்பாற்றியுள்ளோம். எனவேதான் தமிழ்நாட்டில், நோயிலிருந்து குணமடைந்து வீடு திரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், நோயினால் இறந்தவர்களின் சதவிகிதம் மிகவும் குறைவாகவும் உள்ளது.

**‘‘விலகி இருங்கள், விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்’’** எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதை நான் அறிவேன்.

ஊரடங்கு அமல்படுத்தியபோதும், அரசு விவசாய பணிகளுக்கும், சரக்கு போக்குவரத்திற்கும் அனுமதி அளித்து, அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

- **மக்களுக்கான விழிப்புணர்வு** ஏற்படுத்தி பொது இடங்களில் முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி மற்றும் கைகளை முறையாக கழுவுதல் ஆகியவற்றை உறுதிபடுத்தி வருகிறோம்.
- நமது மாநிலத்தில் இருந்து 4 லட்சத்து 18 ஆயிரத்து 903 புலம் **பெயர்ந்த தொழிலாளர்களை** பத்திரமாக அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். மேலும் 12.8.2020 வரை 64,661 வெளிநாடு

வாழ் தமிழர்களை "வந்தே பாரத் மற்றும் சமுத்திர சேது இயக்கத்தின்" மூலம் பத்திரமாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்துள்ளோம்.

- மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக பஞ்சாயத்துகளில் வாழும் மக்களுக்காக இலவசமாக மறுமுறை உபயோகிக்க தகுந்த முகக் கவசங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு முழுவதும், **தொடர்ந்து வீடு வீடாக காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுகளுக்கான அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்து**, RTPCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறோம்.

- தற்போது மாநில அளவில் **1,29,000 படுக்கைகள்** தயார் நிலையில் உள்ளன. மேலும் இந்த எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கும் ஆக்சிஜன் உடன் கூடிய படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கும் தனி கவனம் செலுத்தப்படுகிறது.

- **மருத்துவ பணியாளர்கள் எண்ணிக்கை**யை அதிகப்படுத்த சுமார் **1800** மருத்துவர்கள் **7000** செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவசார் பணியாளர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- நவீன உயிர்காக்கும் மருந்துகள் கொள்முதல் செய்து, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. **மருந்துகள், பரிசோதனை கருவிகள், N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள், கபசுர குடிநீர், ஜிங்க் (Zinc) மற்றும் வைட்டமின் மாத்திரைகள்** ஆகியவற்றை கொள்முதல் செய்து, மருத்துவமனைகளுக்கும், களப் பணியாளர்களுக்கும் போதுமான அளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், போதுமான அளவு கையிருப்பிலும் உள்ளன. தற்போது சித்த மருத்துவ முறை சிகிச்சையும் நோயாளிகளுக்கு சிறப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

- இதுவரை மாண்புமிகு அம்மாவின் அரசு, மாநில அரசின் நிதி ஆதாரத்தை கொண்டு கோவிட் நோய் தொற்று தடுப்பு மற்றும் நிவாரண பணிகளுக்காக சுமார் **6,650 கோடி** ரூபாய் செலவிட்டுள்ளது.

- **பொது முடக்க காலத்தில், உணவு பாதுகாப்பினை உறுதி செய்ய, ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்ற 2.01 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கு அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு போன்ற ரேசன் பொருட்களை விலையில்லாமல் வழங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான்.**

**மேலும், அவர்களுக்கு 1,000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கியதும் தமிழ்நாடு தான்.**

- கட்டுமானத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு தொழிலாளர்கள் உள்ளிட்ட 17 அமைப்பு சாரா தொழிலாளர்கள், பட்டாசு தொழிலாளர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், திரைப்படத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 14 நல வாரிய தொழிலாளர்கள், தீப்பெட்டி தொழிலாளர்கள் என மொத்தம் **35.65 லட்சம் தொழிலாளர்களுக்கு தலா 2000 ரூபாய் ரொக்க நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் 13.35 லட்சம் பேருக்கு தலா 1000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.**

- கொரோனா ஊரடங்கு காலத்தில் வெளி மாநில தொழிலாளர்கள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்றோர் ஆகியோரின் பசிப் பிணி போக்கும் அட்சய பாத்திரமாக **அம்மா உணவகங்கள், சிறப்பு முகாம்கள், சமூக உணவுக் கூடங்கள்** மூலம் தினமும் சுமார் 8 லட்சம் மக்களுக்கு சூடான, சுவையான, சுகாதாரமான உணவு விலையில்லாமல் வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் கீழ், ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில், **கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம்** செயல்படுத்தப்படுகிறது.

- பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், கொரோனா தொற்று நோய் சிகிச்சையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கான செலவினை அரசே ஏற்கும். இந்த சலுகை அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், உள்ளாட்சித்துறை, வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, கூட்டுறவு, உணவு வழங்கல் துறை மற்றும் இதர அரசுத்துறை ஊழியர்கள் அனைவரும் இந்த இக்கட்டான காலத்தில் தன்னலம் பாராமல் அயராது களப்பணி ஆற்றி வருகின்றனர். அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தமிழ்நாட்டு மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை இன்று அழைத்து, விருதுகள் வழங்கி,**

**மாண்புமிகு அம்மாவின் அரசு கௌரவப்படுத்த உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**“நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்**
**இப்படை தோற்கின் எப்படை வெல்லும்”**

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, நாம் அந்நியருக்கு எதிராக நடத்திய சுதந்திரப் போரில், ஒன்றிணைந்து போராடி எப்படி வெற்றி பெற்றோமோ, அதுபோல் **மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா தொற்று நோய்க்கு எதிராக, பொதுமக்களின் ஒத்துழைப்புடன் போராடி வெல்லும்** என்பதை உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிக அளவில் தமிழ்நாட்டைச் சார்ந்த கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கும் விதமாக, குறுகிய காலத்தில் ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, அரியலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய **11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அவை அனைத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

மாண்புமிகு அம்மாவின் அரசு ‘நீட் தேர்வை’ நடத்தக் கூடாது என்று கொள்கை அளவில் தொடர்ந்து எதிர்த்து வருகின்றது. கடந்த **3** ஆண்டுகளாக நீட் தேர்வினால், தமிழ்நாட்டிலுள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்கள், மருத்துவ படிப்புகளில் சேர்வது மிகவும் குறைந்து விட்டது என்பதை தெளிவாக ஆராய்ந்து, அதனை நிவர்த்தி செய்யும் விதமாக **அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மருத்துவர் ஆகும் லட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ படிப்பில் உள் ஒதுக்கீடாக 7.5 விழுக்காடு வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு**

**செய்து, அதையே வரலாற்று சிறப்பு மிக்க சட்டமாக பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணி”**

என்று, உழவர்களே இந்த உலகத்திற்கு அச்சாணி என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு விவசாயியின் தலைமையிலான அரசு. அந்த வகையில் விவசாயத்திற்கு எப்போதுமே முக்கியத்துவம் அளித்து வரும் அரசு, கடந்த 8 ஆண்டுகளில், **ஆறு முறை உணவு தானிய உற்பத்தியில் 100 லட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்துள்ளது.**

மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் டெல்டா விவசாயிகளின் உயிர் பிரச்சனையான காவேரி நதிநீர் பிரச்னைக்கு பல்வேறு சட்டப் போராட்டங்கள் நடத்தி **காவேரி மேலாண்மை ஆணையம் அமைத்து,** தொடர்ந்து அவ்வாணையத்தின் மூலமாக காவேரியில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி வருகிறது.

இவ்வாண்டு டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடி செய்வதற்காக, **குறித்த நேரத்தில், அதாவது ஜுன் 12 ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேலும், மேட்டூர் அணையில் தண்ணீரை திறப்பதற்கு முன்னரே கடைமடை வரை தூர் வாரப்பட்டு, வழக்கத்திற்கு மாறாக 10 நாட்களுக்கு முன்னரே தண்ணீர் கடைமடை வந்தடைந்தது.** இதனால், டெல்டா பகுதியிலுள்ள **4 லட்சத்து 11 ஆயிரம் ஏக்கர் நிலங்களில்** விவசாயிகள் தற்பொழுது குறுவை நெல் பயிர் சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்டா விவசாய பெருமக்களின் கோரிக்கையினை உணர்வுபூர்வமாக உணர்ந்தும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், **தமிழ்நாட்டின்**

**உணவு பாதுகாப்பினை உறுதிபடுத்திடவும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, கடலூர், மாவட்டங்களில் உள்ள காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவித்து, குறுகிய காலத்திலேயே வரலாற்று சிறப்பு மிக்க சட்டம் இயற்றி, இப்பகுதிகளில் வேளாண்மைக்கு நேரடியாக பாதிப்பு தரும்** எந்த தொழிற்சாலைகளும், திட்டங்களும் செயல்படுத்த முடியாது என்ற நிலையை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கியுள்ளது என்பதனை விவசாயி என்ற முறையில் மிக்க பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் பெருமக்களுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும், மீனவ நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசல் என்ற இடத்தில் சுமார் 1,102 ஏக்கர் நிலப்பரப்பில், 1023 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த நவீன கால்நடை பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டில் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

தேனி மாவட்டம், வீரபாண்டி மற்றும் தப்புகுண்டு வருவாய் கிராமங்களில், புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்த ஆண்டு அமைக்க ஆணை வெளியிடப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையிலும் புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இவ்வாண்டே துவக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள மீனவ சகோதாரர்களின் வாழ்வில் வளம் சேர்த்திட மேற்கொண்ட இத்தீவிர முயற்சிகளினால் 2019–2020–ஆம் ஆண்டில் இந்தியாவின் கடல் மீன் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

கிராமப்புர ஏழை, எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்திட, இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அவர்கள் காட்டிய வழியில் பீடுநடை போடும், மாண்புமிகு அம்மாவின் அரசு, ஆவின் நிறுவனத்தில் வரலாற்றுச் சாதனையாக இந்த ஆண்டு ஜுன் மாதம் **28**ம் நாள் அன்று **39.1** லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளது.

**“நீர் என்பது உயிருக்கு நேர்”**
**“ஊர் வளம் பெற, நீர் வளம் காப்போம்”**

பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரை வீணாக்காமல் தேக்கி வைப்பதற்காக **குடிமராமத்து திட்டத்தை விவசாயிகளின் பங்களிப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளில், 1,433 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,278 நீர்நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** இதுபோன்று, உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் உள்ள **1,315** நீர்நிலைகள் **811.68** கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.

**அதேபோல், கடந்த மூன்றாண்டுகளில், மாண்புமிகு அம்மாவின் அரசு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நதிகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.** மேலும், இதுபோன்று, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக **730.4** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **31,834** சிறிய தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன.

**காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்திக்கடவு–அவினாசி திட்டம், தாமிரபரணி–கருமேனி ஆறு, நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம்** என பல்வேறு நீர்வள ஆதார திட்டங்களை, நிறைவேற்றி வரும் ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

**அண்டை மாநிலங்களுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு சுமுகமான உறவை பேணி வருவதால், சென்னை நகரின் குடிநீர் தேவைக்காக 8 டிஎம்சி கனஅடி கிருஷ்ணா நதிநீரை ஆந்திர மாநிலம் உடனடியாக விடுவித்தது.**

**அதேபோல், கேரள மாநிலத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக பரம்பிகுளம்–ஆளியாறு, பாண்டியாறு–புன்னம்புழா திட்டங்களில் நிலவி வந்த பிரச்னைகளுக்கு சுமூகமான தீர்வு காணப்படும் நிலை எட்டப்பட்டுள்ளது.**

ஒரு நாடு வளம் பெற வேண்டுமென்றால், அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கும் நோக்கத்தினை அடைய மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளினால்,

- இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல் திறன் தரக் குறியீட்டின்படி **பள்ளிகளில்** வசதிகளை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.

- கொரோனா பொது முடக்கத்தால், பள்ளிகள் திறக்கப்படாத நிலையில் கூட, **10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்களை வீட்டிலிருந்தே தொடர்ந்து கற்றுக் கொள்ள கல்வி தொலைக்காட்சி மூலமாக,** காணொலிப் பாடங்கள் ஒலிபரப்பப் படுகின்றன. மேலும், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன், அரசு வழங்கியுள்ள விலையில்லா மடிக்கணினிகளில் காணொலிப் பாடங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

- **உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் 49 சதவிகிதத்தை எட்டி, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது.**

- **சமீபத்தில் தேசிய தர நிர்ணயக் கட்டமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கையில், உயர் கல்வி தரவரிசைப் பட்டியலில், அகில இந்திய அளவில் உள்ள முதல் 100 பல்கலைக்கழகங்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த 18 பல்கலைக்கழகங்களும், முதல் 100 பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாட்டை சார்ந்த 18 பொறியியல் கல்லூரிகளும், முதல் 100 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 32 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இடம் பெற்று சாதனை படைத்துள்ளன.**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான **69** விழுக்காடு இடஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான இடையூறும் வராமல் இருப்பதற்காக, இந்த ஒதுக்கீட்டினை அரசியலமைப்பு சட்டம் ஒன்பதாவது பிரிவின் கீழ் கொண்டு சேர்த்தது **சமூகநீதி**

**காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா** அவர்கள்தான். பிற்படுத்தப்பட்டோர் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக சமீபத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மறுசீரமைப்பு செய்து, தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, சீர்மரபினர் நல வாரியத்தின் தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு அவ்வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. **மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியினால், மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அகில இந்திய மருத்துவக் கல்வி ஒதுக்கீட்டில் சாதகமான தீர்ப்பினை பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.**

சிறுபான்மையினருக்கு எப்போதும் அரணாக விளங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைத்து மாவட்டங்களிலும், **முஸ்லீம் மற்றும் கிருத்துவ மகளிர் உதவும் சங்கங்களை** உருவாக்கியுள்ளது. **ஜெருசலம் மற்றும் ஹஜ்** புனிதப் பயணம் ஆகியவற்றை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு ஊக்குவித்து வருகிறது. தேவாலயங்கள் மற்றும் மசூதிகளுக்கு வழங்கப்படும் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவி இவ்வாண்டு முதல் 5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில்** அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள **பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து இந்த ஆண்டு, மேலும் 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து ஆதி திராவிட குடியிருப்புகளிலும் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**பெண்களின்** பொருளாதார சுதந்திரத்திற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் வகையில் 2011ம் ஆண்டு முதல் இதுவரை அமைக்கப்பட்ட, 2 லட்சத்து

20 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 67 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**மங்காப்புகழ் கொண்டு, தனது ஆளுமையால் சரித்திரத்தில் இடம் பெற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இல்லம், நினைவிடமாக மாற்ற நிலம் எடுப்புப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், அதனை நிருவகிக்கவும், பராமரிக்கவும், அறநிறுவனம் (Foundation) ஒன்று எனது தலைமையில் நிறுவ ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மெரீனாவில் நினைவிடம் (Memorial) அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

தமிழர்களின் நாகரீக தொன்மையை உலகுக்கு பறைசாற்றும் கீழடியில் 12 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **உலக தரம் வாய்ந்த அகழ்வைப்பகம்** அமைக்கும் பணிக்கு நான் சமீபத்தில் அடிக்கல் நாட்டியுள்ளேன். அப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய 5 புதிய மாவட்டங்களை ஒரே ஆண்டில் தொடங்கிய பெருமை மாண்புமிகு அம்மாவின் அரசையே சாரும்.** நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து புதிய மயிலாடுதுறை மாவட்டம் துவங்க பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்கும்போது இருண்டு கிடந்த தமிழ்நாட்டை, தனது அயராத முயற்சியினால் பல்வேறு திட்டங்களை தீட்டி, அவற்றை நிறைவேற்றியதன் காரணமாக, இன்று **தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது.** மாண்புமிகு அம்மா அவர்கள், 2016ல் வரலாற்று சிறப்புமிக்க வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தவுடன், ஒவ்வொரு வீட்டு மின் நுகர்வோருக்கும் 100

யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்க ஆணையிட்டார்கள். **இதன்மூலம் சுமார் 2.1 கோடி குடும்பங்களுக்கு மேல் பயன்பெற்று வருகின்றனர். குறிப்பாக, 100 யூனிட்டிற்குள் மின் நுகர்வு செய்யும் சுமார் 70 லட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இன்று வரை தொடர்ந்து விலையில்லா மின்சாரமே வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகையை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு கடந்த** 4 வருடங்களாக **11,512 கோடி ரூபாய் மானியமாக** வழங்கி உள்ளது.

**குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க,** கடந்த 9 ஆண்டுகளில், சுமார் 2 லட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 7,540 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. **நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை** மேம்படுத்திட **சீர்மிகு நகரத் திட்டத்தின்** கீழ் 11 நகரங்களில், 10,451 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் பலகட்ட முன்னேற்ற நிலையில் உள்ளன.

ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியமாக விளங்குவது **காவல் துறையி**ன் பணியாகும். குற்றங்கள், களவுகள் மற்றும் விபத்துகள் குறைந்து, சமூக விரோதிகளை சட்டத்தின் பிடியில் நிறுத்தி, பாதுகாப்பான அமைதியான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

கடந்த ஆண்டுகளில் இரண்டு முறை நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாகவும், நான் கடந்த ஆண்டு இங்கிலாந்து, அமெரிக்கா, துபாய் போன்ற நாடுகளுக்கு நேரடியாகச் சென்று தொழில் முதலீட்டாளர்களை சந்தித்ததன் வாயிலாகவும், தொடர்ந்து தமிழ்நாடு புதிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. இம்முயற்சிகளால், கடந்த ஓராண்டில் மட்டும் தமிழ்நாட்டிற்கு 54 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான 107 திட்டங்கள் வந்துள்ளன. இதன் மூலம் 1 லட்சத்து 54 ஆயிரத்து 849 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கொரோனா பாதிப்பிலிருந்து மீட்டெடுத்து, மறுகட்டமைப்பு செய்ய புகழ்பெற்ற வல்லுநரும், நமது முன்னாள்**

**ரிசர்வ் வங்கி கவர்னருமான முனைவர். ரங்கராஜன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவையும் மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்துள்ளது.**

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைந்து எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மும்பையைச் சேர்ந்த, ப்ராஜெக்ட்ஸ் டுடே (Projects Today) என்ற நிறுவனம், COVID காலத்திலும், அதாவது **கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்களில் புதிய முதலீடுகளை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதால், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தினைப் பிடித்துள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.**

கொரோனா காலத்தில் மட்டும், இதுவரை மொத்தம் 41 புதிய தொழில் திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தொழில் நிறுவனங்களுடன் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் 30ஆயிரத்து 664 கோடி ரூபாய் முதலீடும், 67 ஆயிரத்து 212 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெருமளவிலுள்ள தொழில்களுக்கு, குறிப்பாக **குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஊரடங்கினால் ஏற்பட்ட பாதிப்புகளை களைய,** இதுவரை 7,043 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

எனவே, தமிழ்நாடு பொருளாதாரத்தில் தனது இயல்பு நிலையை வெகு விரைவில் அடைந்து, தொடர்ந்து முன்னிலையில் இருக்கும்.

**''அம்மா வழியில் ஆட்சி, அனைத்து துறைகளிலும் வளர்ச்சி'' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் இந்த அரசு பல்வேறு தடைகளை தகர்த்தெறிந்து, ஒவ்வொரு துறையிலும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டு வருகிறது.**

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தங்களது இன்னுயிரை ஈந்த தியாக செம்மல்களை சிறப்பிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும்

ஓய்வூதியம் 16,000 ரூபாயிலிருந்து 17,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் மற்றும் சிறப்பு ஊதியம் 8,000 ரூபாயிலிருந்து 8,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் முழு ஆரோக்கியத்துடனும், நலமும், மகிழ்ச்சியும் நிறைந்து வாழ்வதற்காக பொருளாதார, சமூக, சட்ட ரீதியாக உங்களின் அரசு, துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது மக்களுக்கான அரசாக, மக்களுடன் என்றென்றும் இணைந்திருக்கும் என்பது உறுதி. உங்களின் அன்பையும், ஆதரவினையும் பெற்றுள்ள நான், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் உங்களுக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன் என்று இந்த நன்னாளில் நான் மீண்டும் உறுதிபட கூறுகிறேன். இன்று கொரோனா வைரஸ் தொற்றினால் உலக மக்கள் அனைவரின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றின் பிடியிலிருந்து அனைவரும் விரைவில் மீண்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப இந்நன்நாளில் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திர தின நல் வாழ்த்துகளை உரித்தாக்குகின்றேன்.

**வாழ்க அண்ணா நாமம்!**

**வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழ்!**

**ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கீர்த்தி!**

**தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி!**

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!**
**வாழிய பாரத மணித் திருநாடு!**

**நன்றி! வணக்கம்.**

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**